# இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியங்களும் தமிழறிஞர்களும்

## தொகுதி – III




பதிப்பாசிரியர்கள்

**முனைவர் க. முருகேசன்**
**முனைவர் சு. குமரன்**
**முனைவர் கே. சுபாஷினி**
**முனைவர் சு. இராமலிங்கம்**

# இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியங்களும் தமிழறிஞர்களும்

**(பன்னாட்டு ஆய்வுக் கருத்தரங்கம்)**


| | | |
|---|---|---|
| பதிப்பாசிரியர்கள் | : | **முனைவர் க. முருகேசன்**<br>**முனைவர் சு. குமரன்**<br>**முனைவர் கே. சுபாஷினி**<br>**முனைவர் சு. இராமலிங்கம்** |
| பதிப்புரிமை | : | பதிப்பாசிரியர்கள் |
| முதற்பதிப்பு | : | டிசம்பர், 2017 |
| வெளியீடு | : | **தமிழ்த்துறை**<br>**கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி**<br>கோயம்புத்தூர் - 641029. |
| கணினி | : | பிரடாக் பிரிண்ட், கோயம்புத்தூர் - 29. |
| அச்சாக்கம் | : | பிரடாக் பிரிண்ட்,<br>476, பூமாதேவி கோவில் அருகில்<br>கவுண்டர் மில்ஸ் (அஞ்சல்)<br>கோயம்புத்தூர் - 29.<br>அலைபேசி : 98432 73994, 91505 91017 |
| பக்கங்கள் | : | X + 460 = 470 |
| விலை | : | உரூ. 350/- |

**ISBN : 978 - 93 - 85267 - 38 - 3**


# International Conference on Tamil Literature and Tamil Scholars of the 20th Century


| | | |
|---|---|---|
| Editor's | : | **Dr. K. Murugesan. Dr. S. Kumaran**<br>**Dr. K. Subhashini. Dr. S. Ramalingam** |
| Copyright's | : | Editors |
| First Edition | : | December, 2017 |
| Published | : | **Department of Tamil**<br>**Kongunadu Arts and Science College**<br>Coimbatore - 641 029. |
| Computer | : | **Prdag Print**, Coimbatore - 29. |
| Printing at | : | **Prdag Print**<br>476, Near Boomadevi Kovil<br>G.N. Mills (Po), Coimbatore - 29.<br>Cell : 98432 73994, 91505 91017 |
| Pages | : | X + 460 = 470 |
| Prize | : | **Rs. 350/-** |

191. **கு. அரிகரசுதன்** 857
பேராசிரியர் ந.சுப்புரெட்டியாரின் உரைத்திறன் -
ஆழ்வார்களின் அகமரபுகளை முன்வைத்து

192. **வி. காருண்யா** 863
பாரதிதாசனின் இதழ்ப்பணிகள்

193. **எஸ். பால்வின்செனட்** 869
வ.உ.சிதம்பரனாரின் தமிழ்த் தொண்டுகள்

194. **வெ. மைதிலி** 874
இனிய இறையன்பும் எளிய சொல்லாட்சியும்

195. **ஜ. ஜெயவதனி** 878
யாழ்ப்பாணத்துத் தமிழ் அறிஞர்கள் வரிசையில்
பேராசிரியர்.வி.சிவசாமி அவர்களின் பங்கும் பணியும்

196. **மா. ஜாஸ்மின் பிரியா** 883
எம்.ஏ.சுசீலாவின் வாழ்க்கை வரலாறும் தமிழ்த்
தொண்டும்

197. **அ. மாணிக்கம்** 888
குறுந்தொகையில் கபிலரின் கருப்பொருள்கள்
வருணனை

198. **மா. பூங்கோதை** 893
'புதிய காளி' சிறுகதைத் தொகுப்பில் பெண் சார்ந்த
சிக்கல்கள்

199. **முனைவர் மு. ராஜகுமார்** 897
நற்றிணையில் நெய்தல் நில மக்களின் தொழில்கள்

200. **கொ. இராமகிருஷ்ணன்** 902
பூங்கொடி காவியத்தில் தமிழர் திருநாள்

201. **முனைவர் சு. அந்தோணி செல்வகுமார்** 905
பாவேந்தரின் புதிய சமுதாயம்

202. **இல. பிரவின் பீற்றர் ஞானையா** 909
கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை

203. **முனைவர் க. சந்திரசேகரன்** 914
பாரதிதாசன் கவிதைகளில் புரட்சிப் பெண்மை

204. **இர. ஜோதிமீனா** 918
தமிழறிஞர் கோவை ஞானியின் இதழ்ப்பணிகள்

205. **முனைவர் மு. ருக்மணி** 922
அ.சீ.ரா. நாடகங்களில் சமூகச் சிக்கல்களும் தீர்வுகளும்

206. **சிவ. விஜயபாரதி** 928
மக்கள் கவிஞர் சுகிர்தராணியின் கவிதைச் சீற்றம்

205

# அ.சீ.ரா. நாடகங்களில் சமூகச் சிக்கல்களும் தீர்வுகளும்

முனைவர் மு. ருக்மணி
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி)
கோயம்புத்தூர் - 29.

## முன்னுரை

அ.சீ.ரா. இருபதாம் நூற்றாண்டில் (1905-1975) வாழ்ந்தவர். ஆங்கிலப் பேராசிரியராகப் பணி ஆற்றியதோடு தமிழில் கவிதை, நாடகம், கட்டுரை என்று பல படைப்புக்களைத் தந்தவர். இவர் பதினெட்டு நாடகங்களை எழுதியுள்ளார். இதிகாச நாடகம், வரலாற்று நாடகம், என்று பல வகை நாடங்களை எழுதிய இவர் மூன்று சமூக நாடகங்களையும் எழுதியுள்ளார். கிராம மக்கள் சமூகத்தின் வாழ்க்கை இயல்புகளை விளக்கிக் காட்டும் வகையில் இவர் நாடகங்கள் அமைந்துள்ளன. மக்கள் அறியாமையால் அடையும் சிக்கல்களையும் அச் சிக்கல் தீர்வதற்கு அவர்கள் செயல்பட வேண்டிய விதம் குறித்தும் அ.சீ.ரா. தம் நாடகங்களில் அறிவுறுத்தி யுள்ளார். இருபதாம் நூற்றாண்டுத் தொடக்கக் காலத்தில் ஒன்றிரண்டாக வெளிவந்த சமூக நாடகங்கள் பிற்பகுதியில் மிகுதியாக அரங்கேற்றப்பட்டன. ஆங்கிலக் கல்வி இந்திய மண்ணில் பல மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. பல படித்த அறிஞர்கள் ஆங்கில நாடகங்களைப் போன்று தங்கள் மொழியிலும் நாடகங்கள் இருக்க வேண்டும் என விரும்பினர். அவ்வகையில் அ.சீ.ரா.வும் சமூகச் சிந்தனையோடு மக்களிடம் பரவியுள்ள மூட நம்பிக்கைகள் அகன்று மக்கள் சிந்தித்துச் செயல்பட வேண்டும் என்ற நோக்கில் சமூக நாடகங்கள் இருக்க வேண்டும் என விரும்பினர். கவிதையானது மனிதர்களை அவர்களின் வாழ்வை அதன் சிக்கல்களை இன்பங்களை இயற்கையழகை எனப் பல நிலைகளை வெளிப்படுத்துவதாய் உள்ளது. குடும்பத்தில் அவளின் நிலை குறித்துமான கருத்துக்களை வழி வழியாக வரும் கருத்தாக்கங்களின் அடிப்படையில் பெண்களைக் குறித்த கவிதைகளைப் புனைந்துள்ளார் என்றால் மிகையாகாது. அ.சீ.ரா. வின் சமூக நாடகங்களில் கிராம மக்களின் அறியாமையால் அவர்கள் வாழ்வில் ஏற்படும் சிக்கல்களும் அவற்றுக்கான தீர்வுகளும் ஆராயப்படுகின்றது.

## பெண் - அழகு

பெண் என்பவள் அழகின் வடிவமாகவே பெரும்பான்மையான கவிதைகளில் காட்சிப்படுத்தப்படுகிறாள். அவளுடைய அழகை வருணிப்பதிலும் அதனால் தாமடையும் மகிழ்ச்சியையும் அடைய முடியாத அழகைக் குறித்த சோகங்களையும் கவிஞர்கள் தம் கவிதைகளில் பதிவு செய்கின்றனர். அ.சீ.ரா. பெண், உள்ளும் புறமும் ஆகிய இரு கவிதைகளில் பெண்களின் அழகு குறித்தான தன் எண்ணங்களை வெளிப்படுத்தியுள்ளார். பெண் என்ற கவிதையில் இவ்வுலகின் முப்பது கோடி உயிரினங்களைப் படைத்த கலைக் குயவனாம் இறைவன், ஆணைப் படைத்து பின் அவனைக் கட்டி வைக்கும் கனற்கயிராகப் பெண்ணைப் படைக்கத் திட்டமிட்டதாகவும்